IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.5/2019
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.50 PM.

வா.சா. 1 சாட்சி செல்வி க.பெ.பாண்டியராஜன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 11.09.2025 in accordance with the provisions of Act XX141.**

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னென்ன சொத்துக்கள் வழக்கில் காட்டியுள்ளேன் என்றால் நிலங்கள், தோட்டங்கள் சொத்தாக சேர்த்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியாது.

2. மீனம்மாள் மற்றும் 2ம் பிரதிவாதி சுப்புராஜ் எதற்காக வழக்கில் பிரதிவாதிகளா சேர்த்துள்ளேன் என்றால் என்னுடன் வழக்கு தாக்கல் செய்ய வரவில்லை. பாப்பு ரெட்டியார், சக்கரை பாபு, லெட்சுமண ரெட்டியார் மூவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் மூவருக்கும் பாத்தியம் என்றால் சரிதான்.

3. வழக்கிடை சொத்துக்களை 3 பாகங்களாக பிரித்து மேற்படி 3 சகோதரர்களும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வடக்கு பகுதியை பாப்பு ரெட்டியாரும், மையப்பகுதியை எனது தகப்பனார் சக்கரை பாபுவும், தென் பகுதியை லெட்சுமண பெருமாளும்

தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1990ற்கு முன்பாக எனது தகப்பனார் சக்கரை பாபு தான் அனுபவம் செய்து வந்த மைய பகுதியை லெட்சுமண பெருமாளுக்கு ஒத்தியாக வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

4. வடக்கு பகுதியை பாப்பு ரெட்டியாருடைய வாரிசுகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பாப்பு ரெட்டியார் மகன் வெள்ளைச்சாமி தனது தகப்பனார் அனுபவம் செய்து வந்த வடபுறம் பகுதியல் ஒரு பகுதியை விற்பனை செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. 13.13.1992 எனது தகப்பனார் சக்கரை பாபு என்பவர் தான் அனுபவம் செய்து வந்த 3 ல் 1 பகுதியை லெட்சுமண பெருமாளுக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி கிரைய ஒப்பந்தம் படி சர்க்கரை பாபு லெட்சுமண பெருமாளுக்கு கிரையம் பதிவு செய்து கொடுக்காததால் கிரையம் செய்ய பரிகாரம் கோரி மாண்புமிகு மதுரை 3வது சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.920/1993 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது.

6. மேற்படி வழக்கில் 24.03.2003 ல் லெட்சுமண பெருமாளுக்கு சாதகமாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி தீர்ப்பாணையின் மீது லெட்சுமண பெருமாள் மதுரை 3வது சார்பு நீதிமன்றத்தில் இ.பி.எண்.215/2015 கிரையம் பதிவு செய்யக்கோரி மனு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் எனது தகப்பனார் இறந்ததனால் என்னையும், எனது சகோதரர்களையும் வாரிசுகளாக சேர்க்கப்பட்டது என்றால் சரிதான்.

7. மேற்படி வழக்கில் எனது வழக்கறிஞர் மூலம் ஆஜரானேன் என்றால் சரியல்ல. மேற்படி நிறைவேற்றுதல் மனுவில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி தற்போது இல்லை என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நிறைவேற்றுதல் மனு மதுரை 3வது சார்பு நீதிமன்றத்தில் இருந்து திருமங்கலம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனுவிற்கு திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் ஆஜரானேன் என்றால் சரிதான்.

8. எனது தகப்பனார் கிரைய ஒப்பந்தம் எழுதிகொடுத்த விபரம், எனது தகப்பனார் மீது வழக்க நடந்த விபரம் அதில் தீர்ப்பாணை சொல்லப்பட்ட விபரம் நிறைவேற்றுதல் மனு நடைபெற்ற விபரம் அனைத்தும் தெரிந்தே உள்நோக்கத்தோடு தாவா வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 3 ல் 1 பங்கு சம்பந்தமாக லெட்சுமண பெருமாளுக்கு சாதகமாக தீர்ப்பாணை உள்ள நிலையில் என்னுடைய வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

9. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்து எங்களுக்குள்ள கூட்டு பாத்தியம் சம்பந்தமாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கிடை சொத்துக்கள் லெட்சுமண பெருமாள் அனுபவம் செய்து வந்து அவரது காலத்திற்கு பின்புதான் அவரது வாரிசுகளான 3 முதல் 6 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

10. வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 01.10 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.11 12:11:59 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.